**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

முன்னிலை : **செல்வி V. பார்கவி., B.A.B.L.,L.L.M.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

-------

2021-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
திருவள்ளுவராண்டு 2052, பிலவ வருடம் ஆவணி மாதம் 15-ம்நாள்

------

**<u>அசல் வழக்கு எண். 63/2012 -ல் இடைமனு எண். 954/2019</u>**

1. கிருஷ்ணம்மாள் ( இறந்தார்) ..1-ம்மனுதாரர் / 1-ம்வாதி
2. இராமகிருஷ்ணன் சார்பாக அவரின் அதிகாரம் பெற்ற முகவர் சுவாமிநாதன் மூலமாக ..2-ம்மனுதாரர்/ 2-ம்வாதி
3. சீத்தா ..சேர்க்க வேண்டிய தரப்பினர் / இறந்த 1-ம்வாதியின் வாரிசு

...எதிர்...

1. பாலசுந்தர்
2. பாபு ..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 25.08.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். சுந்தரய்யா அவர்களும், 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஆத்மநாதன் அவர்களும் ஆஜராகியும், 2-ம் எதிர்மனுதாரரை அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினர் ஆக்கப்படபட்டும் இருதரப்பு வாதுரைகளைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள்வரையில் என் பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

**<u>உத்தரவு</u>**

இறந்த 1-ம் வாதிக்கு வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு காலவரையறைச்சட்டம் பிரிவு 5-ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர் 2-ம் வாதியின் அதிகார முகவர். மனுதாரர் இறந்த 1-ம் வாதியின் வாரிசுதாரர். அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரமும், சுவாதீன மீட்பு பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு நிலுவையில் இருந்தபோது 1-ம் வாதி கடந்த 10.02.2017 அன்று இறந்துவிட்டார். இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா

ஆகியோரும் வாரிசுதாரர்கள். அவர்களில் சிவா கடந்த 04.07.2007 அன்று இறந்துவிட்டார். இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகளாக உள்ளனர். இறந்த 1-ம்வாதிக்கு 2,3 மனுதாரர்களில் 2-ம் மனுதாரர் ஏற்கனவே அசல் வழக்கில் 2-ம்வாதியாக உள்ளார். 3-ம்மனுதாரரை இறந்த 1-ம்வாதியின் வாரிசுதாரராக அசல் வழக்கில் சேர்க்க வேண்டியது அவசியமானது. இறந்த 1-ம்வாதிக்கு 2,3 மனுதாரர்களைத்தவிர வேறு வாரிசுகள் யாரும் இல்லை. 2,3 மனுதாரர்கள் இறந்த 1-ம்வாதியின் எல்லா சொத்துக்களுக்கும் வரவேணடிய தொகையை வசூலித்து அடையவும் உரிமை உடையவர்கள். 2,3 வாதிகள் வழக்குச் சொத்துக்கும் உரிமை உள்ளவர்கள். எனவே 3-ம்மனுதாரரை இறந்த 1-ம்வாதியின் வாரிசுதாரராக சேர்க்க வேண்டியது அவசியமானது. இறந்த 1-ம் வாதிக்கு அவர் இறந்த 10.02.2017-ம் தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் அதாவது 10.05.2017-ம் தேதிக்குள் மனு தாக்கல் செய்ய வேண்டும். எனவே இறந்த 1-ம்வாதிக்கு வாரிசு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. <u>1-ம்எதிர்மனுதாரர் தரப்பு எதிருரைச்சுருக்கம்</u>

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. மனுவின் அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. 1-ம் வாதி கிருஷ்ணம்மாள் 10.02.2017 அன்று இறந்துவிட்டார் என்பது உண்மை. இறந்த 1-ம் வாதிக்கும் அவரது கணவர் சிவசிதம்பரம் தம்பதியினருக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா ஆகியோர் வாரிசுதாரர்கள். ஏற்கனவே சிவசிதம்பரம் இறந்துவிட்டார். எனவே இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா ஆகியோர் மட்டுமே வாரிசுதாரர்கள் ஆவார்கள். அவர்களில் 1-ம் வாதியின் மகனான சிவா 04.07.2007-ல் இறந்துவிட்டார். மேற்படி சிவாவுக்கு கலா என்ற மனைவியும், 2-ம் எதிர்மனுதாரரான பாபு என்ற மகனும் வாரிசுதாரர்கள். தற்போது கலாவும் இறந்துவிட்டார். எனவே இறந்த 1-ம் வாதிக்கு அவரது மகனான சிவாவின் மகனான 2-ம் எதிர்மனுதாரரும் வாரிசுரிமை சட்டப்படி வாரிசுதாரர் ஆவார். மனுவில் இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா மட்டுமே வாரிசுகள் என்று கூறியுள்ளது தவறு. இறந்த 1-ம்வாதிக்கு இம்மனுவின் 2-ம்எதிர்மனுதாரரும் ஒரு வாரிசுதாரர் ஆவார். இறந்த 1-ம்வாதியின் உரிய வாரிசுகளை சேர்த்து இந்த மனு தாக்கல் செய்யாததால் இந்த மனு நிலைநிற்கத்தக்கதல்ல. இறந்த 1-ம்வாதிக்கு 2,3 மனுதாரர்களைத் தவிர வேறு வாரிசுகள் இல்லை என்று மனுவில் கூறியுள்ளது தவறானது. இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் 2-ம் எதிர்மனுதாரர் ஆகியோர்

வாரிசுதாரர்கள் ஆவார்கள். எனவே இறந்த 1-ம் வாதியின் சொத்துக்களுக்கும் 2-ம் எதிர்மனுதாரர் உரிமையாளர் ஆவார். இந்த வழக்கில் 3-ம் மனுதாரரை சட்டப்படி சேர்க்க இயலாது. இறந்த 1-ம் வாதிக்கு எதிராக வழக்கு அற்றுப்போய்விட்டது. இறந்த 1-ம் வாதிக்கு எதிராக வழக்கு அற்றுப்போய்விட்டதை ரத்து செய்ய உரிய காலத்தில் மனுதாரர் மனுத்தாக்கல் செய்யவில்லை. இந்தமனுவில் 2-ம் எதிர்மனுதாரருக்கு எவ்விதமான அறிவிப்பும் கொடுக்கப்படவுமில்லை. இறந்த 1-ம வாதிக்கு வாரிசு மனு 90 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படவேண்டும். ஆனால் இந்த மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டிருப்பதற்கு எவ்வித காரணமும் அபிடவிட்டில் கூறப்படவில்லை. இறந்த 1-ம் வாதிக்கு வாரிசு மனு தாக்கல் செய்ய 1-ம் வாதி இறந்த நாளில் இருந்து ஒவ்வொரு நாள் காலதாமதத்திற்கான காரணத்தை மனுவின் அபிடவிட்டில் கூறவில்லை. எனவே இம்மனுவை 1-ம் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும்.

4.. <u>இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை</u>

மனுதாரர்/ 2-ம் வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா?

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **<u>தீர்வு</u>**

2-ம் மனுதாரர் தரப்பில் 2-ம்மனுதாரர் அசல் வழக்கின் 2-ம் வாதி என்றும், அசல் வழக்கானது எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்பல் பரிகாரம் மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1-ம்மனுதாரர்/ 1-ம் வாதி 10.02.2017அன்று இறந்துவிட்டார் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா என்பவரும் வாரிசுகள் என்றும், அவர்களில் சிவா என்பவர் 04.07.2007 அன்று இறந்துவிட்டார் என்றும், அதுபோக இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மட்டுமே வாரிசுகள் என்றும், 2-ம் வாதி ஏற்கனவே இவ்வழக்கில் ஒரு தரப்பினராக உள்ளநிலையில் இறந்த 1-ம் வாதியின் மற்றொரு வாரிசான 3-ம் மனுதாரரை இறந்த 1-ம் வாதியின் வாரிசாக அசல் வழக்கில் தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமானது என்றும், அவ்வாறு இறந்த 1-ம் வாதியின் வாரிசாக 3-ம் மனுதாரரை சேர்ப்பதற்கு மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்கக்கோரியுள்ள் இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டது. 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரர்கள் மற்றும் சிவா என்பவர்கள் மட்டுமே வாரிசுகள் என்பது சரியல்ல என்றும், இறந்த 1-ம் வாதிக்கு இம்மனுவின் 2-ம் எதிர்மனுதாரர்/

2-ம் பிரதிவாதியும் ஒரு வாரிசுதாரா் என்றும், 1-ம் வாதியின் வாரிசாக 2-ம் எதிா்மனுதாரரும் உள்ள நிலையில் 3-ம் மனுதாரரை மட்டுமே வாரிசாக சோ்க்க வேண்டுமெனக்கோரி உரிய காலத்தில் மனுத்தாக்கல் செய்யாமல் மிகவும் காலதாமதமாக தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்றும், ஒவ்வொரு நாள் கால தாமதத்திற்கும் உரிய காரணம் கூறப்படவேண்டும் என்றும், இறந்த 1-ம் வாதிக்கு வாரிசுகளை அவா் இறந்த தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் மனுத்தாக்கல் செய்திருக்கவேண்டுமென்றும், அவ்வாறு உரிய காலத்தில் மனுத்தாக்கல் செய்யாததற்குரிய காரணத்தை மனுதாரா்கள் மனுவில் கூறவில்லை என்றும், மனுவை 1-ம் எதிா்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதம் செய்யப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டன. வழக்கு கோப்புகள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரா்கள ் தரப்பில் இறந்த 1-ம் வாதியின் வாரிசாக 3-ம் மனுதாரரை தரப்பினராக சோ்க்க மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென இம்மனுவில் கோரியுள்ளனா். வழக்கின் கோப்புகளை பரிசீலனை செய்ததில் தாவா வழக்கானது 1,2 மனுதாரா்களால் 1,2 எதிா்மனுதாரா்கள்/1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை மற்றும் சுவாதீன மீட்பு பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டள்ளது தெளிவாகிறது. மனுதாரா்கள் தரப்பில் இம்மனுவின் 3-ம்மனுதாரரை இறந்த 1-ம் வாதியின் வாரிசாக சோ்ப்பதற்கு மனு தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென இம்மனுவில் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. 1-ம் எதிா்மனுதாரா் தரப்பில் இறந்த 1-ம் வாதிக்கு 2-ம்எதிா்மனுதாரரும் வாரிசு என்றும், இறந்த 1-ம் வாதியின் வாரிசு சோ்க்க ஏற்பட்ட 812 நாட்களுக்கான ஒவ்வொரு நாளுக்குரிய காலதாமதத்தையும் மனுதாரா்கள் உரிய காரணம் கூறி மனுத்தாக்கல் செய்யவேண்டும் என்றும், அவ்வாறு உரிய காரணம் மனுதாரா்கள் மனுவின் அபிடவிட்டில் கூறவில்லை என்றும், மனுவின் ஏற்புரையில் மனுதாரா்கள் 814 நாட்கள் கால தாமதத்திற்கான சரியான காரணங்களை சொல்லவில்லை என்றும் 1-ம் எதிா்மனுதாரரின் வழக்கறிஞா் வாதம் செய்தாா். இம்மனுவில் 2-ம் எதிா்மனுதாரா் அழைக்கப்பட்டு ஆஜரின்மையால் தோன்றாத்தரப்பினராக உள்ளாா்.

8. அசல் வழக்கின் 1-ம்வாதி 10.02.2017 அன்று இறந்துவிட்டாா் என்பதைப் பொறுத்தும், இறந்த 1-ம் வாதிக்கு 2,3 மனுதாரா்கள் மற்றும் சிவா என்பவரும் வாரிசுகள் என்பதைப்பொறுத்தும் 1-ம் எதிா்மனுதாரா் தரப்பில் எவ்விதமான ஆட்சேபணையும் செய்யப்படவில்லை. 1-ம் எதிா்மனுதாரா் தரப்பில் இறந்த 1-ம் வாதிக்கு இம்மனுவின் 2-ம் எதிா்மனுதாரரும் வாரிசுதாரா் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அசல் வழக்கானது 1,2 மனுதாரா்களால் 1,2எதிா்மனுதாரா்கள்/1,2

பிரதிவாதிகளுக்கு எதிராக தாவாச்சொத்தைப்பொறுத்து வாதிகள் இறந்த சிவசிதம்பரம் குத்தகை சீட்டுபடி குத்தகை சாகுபடிதாரர்கள் என்று விளம்பல் பரிகாரமும், அதை ஒட்டி தாவாச்சொத்திலனை 1,2 எதிர்மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் காலி செய்து 1,2 மனுதாரர்கள்/1,2 வாதிகள் வசம் சுவாதீனம் ஒப்படைக்க வேண்டுமென்றும், தாவாச்சொத்தைப்பொறுத்து 1-ம்எதிர்மனுதாரர்/1-ம்பிரதிவாதி 2-ம் எதிர்மனுதாரர்/2-ம் பிரதிவாதிக்கு 09.06.2010 அன்று செய்து கொடுத்த கிரய சாசன ஆவணம் சட்டப்படி செல்லாது அது 1,2 மனுதாரர்களை கட்டுப்படுத்தாது என்று விளம்பல் பரிகாரமும் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில், இந்த மனுவில் 2-ம் மனுதாரர் இறந்த 1-ம் வாதியின் வாரிசாக இம்மனுவின் 3-ம் மனுதாரரை வாரிசாக சேர்க்க மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்தை மன்னிக்க வேண்டுமென இம்மனுவில் கோரியுள்ளார். எதிர்மனுதாரர் தரப்பில் 2-ம்எதிர்மனுதாரரும் ஒரு வாரிசுதாரர் என்று கூறியிருந்தாலும் 2-ம்எதிர்மனுதாரர் ஏற்கனவே இந்த வழக்கில் தரப்பினராக உள்ளதால் அது குறித்து இந்நீதிமன்றம் எந்த விளக்கமும் குறிப்பிடவில்லை. மனுதாரர்கள் இறந்த 1-ம் வாதிக்கு வாரிசாக 3-ம் மனுதாரரை சேர்ப்பதற்கு உரிய காலத்தில் மனுத்தாக்கல் செய்யாமல் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்திற்கான ஒவ்வொரு நாளுக்கும் சரியான விளக்கம் தரப்பட வேண்டும் என்பது சட்ட விதி. ஆனால் மனுதாரர் 812 நாட்கள் காலதாமதத்திற்கான சரியான விளக்கத்தை நீதிமன்றத்தில் முன்சமர்ப்பிக்க தவறிவிட்டதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் 2-ம் மனுதாரருக்கு அவர் தரப்பு வழக்கை நடத்துவதற்கு வாய்ப்பு வழங்கும்வகையிலும் இம்மனுவின் 3-ம் மனுதாரர் அசல் வழக்கில் தீர்வு காண்பதற்கு ஒரு அவசியமான நபர் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு வழக்கை நடத்த போதிய வாய்ப்பு வழங்குவது அவசியமானது என்று கருதியும் மற்றும் அவ்வாறு மனுவினை அனுமதிப்பதால் வழக்கின் மீது ஏற்படும் பல்வேறு மேல் நடவடிக்கைகளையும் (Multiplicity of proceedings) காலதாமதத்தையும் குறைக்கும் என்று கருதியும் இறந்த 1-ம்வாதியின் வாரிசாக 3-ம் மனுதாரரை தரப்பினராக சேர்ப்பதற்கு மனுத்தாக்கல் செய்வதில் ஏற்பட்ட 812 நாட்கள் காலதாமதத்தை மன்னித்து உத்தரவிடக்கோரியுள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. அவ்வாறு இம்மனுவை அனுமதிப்பதால் இம்மனுவில் ஆஜராகி கட்சி செய்துள்ள 1-ம்எதிர்மனுதாரருக்கு ஏற்படும் இழப்பை ஈடு செய்யும் வகையிலும், மனுதாரர் வேண்டுமென்றே வழக்கை காலங்கடத்தியதற்கு அபராதம் விதிக்கும் வகையிலும் அதிகபட்ச செலவுத்தொகை அளித்து

உத்தரவிடலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுகிறது.

9. முடிவில், மனுதாரர்கள் 1-ம் எதிர்மனுதாரருக்கு இம்மனுவின் செலவுத்தொகையாக ரூபாய் 2,500/- யை (ரூபாய் இரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) வருகிற 04.09.2021ம் தேதிக்குள் கொடுக்கும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தானாகவே தள்ளுபடியாகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க - 06.09.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைதிருத்தம் செய்யப்பட்டு 2021-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 31 -ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி.

பின் இணைப்பு

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் | - இல்லை- |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் | -இல்லை- |

மா.உ.நீ.

நேரிய/வரைவு உத்தரவு
அசல் வழக்கு எண். 63/2012-ல்
இடைமனு எண். 954/2019
நாள் - 31.08.2021.